**செய்தி வெளியீடு எண் : 247** **நாள் : 31.01.2025**

**தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம், போட்டிகளில் பங்கேற்பதற்காக 614 வீரர், வீராங்கனைகளுக்கு சுமார் 12 கோடி அளவில் நிதி உதவி வழங்கப்பட்டதன் காரணமாக, அவர்களில் 113 வீரர், வீராங்கனைகள் பதக்கங்களை வென்று நம்முடைய மாநிலத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள் –**

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெருமிதம்.**

திண்டுக்கல் மாவட்டத்தில் 306 ஊராட்சிகள் மற்றும் தேனி மாவட்டத்தில் 130 ஊராட்சிகள் என 436 ஊராட்சிகளுக்கு மொத்தம் 720 கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகளை விழாக்கள் திண்டுக்கல் மாவட்டம் பி.எஸ்.என்.எ பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கம் ஆகிய இடங்களில் நடைபெற்றன. இந்த விழாக்களில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக கலந்து கொண்ட சிறப்புரையாற்றினார்.

**இந்த விழாக்களில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக ஆற்றிய உரை**

திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 436 கிராம பஞ்சாயத்துகளுக்கு கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, தமிழ்நாட்டில் உள்ள 12 ஆயிரத்து 525 கிராம ஊராட்சிகளுக்கும் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸை வழங்குவோம் என்று சட்டப்பேரவையில் அறிவித்திருந்தோம்.

அதன்படி, மதுரையில் சென்ற வருடம் பிப்ரவரி மாதம், முதன்முதலாக 420 ஊராட்சிகளுக்கு கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் வழங்குகின்ற திட்டத்தை தொடங்கி வைத்தோம். அதைத்தொடர்ந்து தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களுக்கும் நேரில் சென்று கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸை வழங்கினோம்.

இன்றைக்கு இறுதியாக திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் உள்ள மொத்தம் 436 கிராம ஊராட்சிகளுக்கு 720 கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸை வழங்க இருக்கின்றோம். தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்டங்ளுக்கு நாங்கள் அனைவரும் நேரில் சென்று ஸ்போர்ட்ஸ் கிட்ஸை வழங்கினோம். அதே போல

உங்களுடைய மாவட்டங்களுக்கும் வரணும்னு எங்களுக்கு ஆசைதான். ஆனால் தவிர்க்க முடியாத பணிச் சூழல் காரணமாக எங்களால் நேரில் வந்து, இந்த விளையாட்டு உபகரணங்களை கொடுக்க முடியவில்லை. ஆனாலும், உங்களையெல்லாம் காணொலி காட்சி வழியிலயாவது பார்த்துவிட வேண்டுமென்று உங்களுடன் பேசிக்கொண்டு இருக்கின்றேன்.

நம்முடைய திராவிட மாடல் அரசு சொல்வதை செய்கின்ற அரசு. இதற்கு உதாரணமா, ஒரே வருடத்திற்குள் தமிழ்நாட்டில் உள்ள 12 ஆயிரத்து 525 பஞ்சாயத்துகளுக்கும் 16 ஆயிரத்து 800 எண்ணிக்கையிலான கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸை கொடுத்திருக்கின்றோம் என்பதை உங்களிடம் தெரிவிப்பதை நான் பெருமையாக கருதுகின்றேன்.

கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் கொடுக்கின்ற ஒவ்வொரு நிகழ்ச்சியும், அதன் மேடையும் எங்களுக்கு மிகவும் நெகிழ்ச்சியான, நெருக்கமான நிகழ்ச்சியாக அமைந்தன. குறிப்பாக அந்த மேடைகளே ரொம்ப வித்தியாசமானதாக அமைந்தன.

இன்றைக்கு இந்த மேடையில் கூட, திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த Fencing வீராங்கனை நம்முடைய தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மாணவி தங்கை தமிழ்ச்செல்வி வந்திருக்கின்றார். இவர் National Games, Senior National Games ஆகியவற்றில் தங்கம் மற்றும் வெண்கல பதக்கங்களை வென்று, Junior & Cadet Asian Championship பட்டதையும் பெற்றுள்ளார்.

அவரது சாதனைகளை அங்கீகரிக்கும் விதமாக 3 சதவீதம் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் கூட்டுறவுத்துறையில் மூத்த ஆய்வாளர் பணியை நம்முடைய திராவிட மாடல் அரசு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்கள். தங்கை தமிழ்ச்செல்வி விளையாட்டுத்துறையில் சாதிக்கத் துடிக்கும் பலருக்கும் முன் மாதிரியாகவும், ஊக்கம் அளிக்கும் வகையிலும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றார்.

அதே மாதிரி, தேனி மாவட்டத்தை சேர்ந்த Basket Ball வீரர் தம்பி சுஜித் அவர்களும் இங்கே வருகை தந்திருக்கிறார். தம்பி சுஜித் SGFI National Games, Youth National Games போட்டிகளில் வெள்ளி மற்றும் வெண்கல பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார். அவர், நம்முடைய SDAT Sports Hostel மாணவர் என்பது நமக்கெல்லாம் மிகப்பெரிய பெருமையாகும்.

தம்பி சுஜித் அவர்களும், தங்கை தமிழ்ச்செல்வி அவர்களும் விளையாட்டுத்துறையில் இன்னும் பல சாதனைகளை படைக்க என்னுடைய வாழ்த்துக்களை, பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவர்களைப்

போல இன்னும் பல நூறு வீரர்களை உருவாக்க வேண்டும் என்று நம்முடைய அரசு உறுதியோட செயல்பட்டு கொண்டுள்ளது.

"விளையாட்டுப் போட்டிகளில் சாதனைப் படைக்கும் வீரர்களின் குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன என்ற செய்தியே வரக்கூடாது" என்கின்ற வகையில் செயல்பட வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டுள்ளார்கள்.

விளையாட்டு வீரர்களுக்கு பொருளாதாரம் ஒரு தடையா இருக்கக் கூடாது என்றுதான் Tamil Nadu Champions Foundation என்ற திட்டத்தை மட்டுமல்ல, அது போன்ற பல திட்டங்களை நம்முடைய அரசு செயல்படுத்தி வருகின்றது.

அதே போல, தேசிய அளவிலான போட்டிகளில் 614 வீரர்களுக்கு, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் சுமார் 12 கோடி அளவில் நிதி உதவி வழங்கியிருக்கின்றோம். அவர்களில் 113 பேர் பதக்கங்களை வென்று நம்முடைய மாநிலத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில் இருந்து நிதி உதவி தேவைப்படுவோர் https://tnchampions.sdat.in/ என்னும் இணையதளத்தில் விண்ணப்பிக்குமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன்.

சமீபத்தில், விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு தமிழ்நாடு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 3 சதவீதம் இட ஒதுக்கீட்டின் கீழ் பணி வாய்ப்பினை வழங்கும் விதமாக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்திய வரலாற்றிலேயே முதன் முறையாக ஒரே நேரத்தில் 84 வீரர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த முன்னெடுப்புகளில் முக்கியமான ஒன்று தான், நம்முடைய கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ் வழங்குற திட்டம். விளையாட்டு என்பது நகரங்கள் மட்டுமல்ல, குக்கிராமத்துல உள்ள பிள்ளைகளுக்கும் போய் சேரணும்னு தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்தத் திட்டத்தை செயல்படுத்த உத்தரவிட்டார்கள்.

கலைஞர் அவர்களின் பெயர்ல எத்தனையோ திட்டங்கள் இருக்கின்றன. இருந்தாலும், நம்முடைய விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் கலைஞர் அவர்களுடைய பெயரில் செயல்படுத்தப்படுகின்ற திட்டம் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ் திட்டம் ஆகும்.

ஏன் இந்த திட்டத்துக்கு கலைஞர் பெயரை வைத்தோம் என்று கேட்கின்றார்கள். அதுக்கு ஒரு காரணம் இருக்கின்றது. கலைஞர் அவர்களிடம்

இருந்த உழைப்பு, பயிற்சி, விடாமுயற்சி, போராடும் குணம், Team Spirit இவை அனைத்தும் விளையாட்டில் வெற்றி பெற வேண்டிய ஒவ்வொரு வீரருக்கும் தேவையானவையாகும். அதை உணர்த்ததான் கலைஞர் அவர்களுடைய பெயரை இந்த திட்டத்திற்கு வைத்துள்ளோம்.

ஆகவே, இந்த விளையாட்டு உபகரணங்களை பயன்படுத்தி நீங்கள் வெற்றிகரமான வீரர், வீராங்கனையராக வரவேண்டும். இன்றைக்கு ஸ்போர்ட்ஸ் கிட்ஸ் வாங்குகின்ற நீங்கள் நாளைக்கு பதக்கங்களை வெல்லவேண்டும். அதற்கு நம்முடைய திராவிட மாடல் அரசு எல்லா வகையிலும் துணை நிற்கும்.

விளையாட்டு உபகரணங்களைப் பெற்று இருக்கின்ற திண்டுக்கல் – தேனி மாவட்டங்களைச் சேர்ந்த ஊராட்சி மன்றங்களுக்கும், அதன் முகங்களாக வருகை தந்திருக்கும் இளைஞர்கள் – மாணவர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள், நன்றி வணக்கம் என்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி, மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி (காணொலி வாயிலாக), சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.இ.பெ.செந்தில்குமார் (காணொலி வாயிலாக), திரு.ச.காந்திராஜன், திரு.கே.எஸ்.சரவணக்குமார், திரு.ஆ.மகாராஜன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.வி.ஷஜீவனா,இ,ஆ.ப., (தேனி), தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு.ஜெ.மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., திருமதி.மொ.நா.பூங்கொடி,இ.ஆ.ப., (திண்டுக்கல்), திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி.இளமதி ஜோதி பிரகாஷ், தேனி–அல்லிநகரம் நகராட்சித் தலைவர் திருமதி.ரேணுபிரியா பாலமுருகன். சர்வதேச வாள்வீச்சு வீராங்கனை செல்வி.எம்.தமிழ்ச்செல்வி (திண்டுக்கல்), தேசிய கூடைப்பந்து வீராங்கனை செல்வி.எஸ்.வித்யபாரதி (திண்டுக்கல்), தேசிய கூடைப்பந்து வீரர் திரு.U.S.சுஜித் (தேனி) உள்பட அரசு உயர் அலுவலர்கள். விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu